சுருக்கம்

வேளாண்மைத்துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவினை இரண்டாகப் பிரித்து திருச்சிராப்பள்ளி மற்றும் பெரம்பலூர் விற்பனைக்குழுக்களாக ஏற்படுத்துதல் – 1987–ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 9(1)(a) மற்றும் 4(1) –ன் கீழ் உறுதிபடுத்தியும் சட்டப்பிரிவு 5(1) மற்றும் 6(2)–ன் கீழ் விற்பனை குழு தோற்றுவித்தும், அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகள் (Notified market areas) குறித்தும் அறிவிக்கைகள் வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (வேவி2) துறை

அரசாணை (நிலை) எண்.42

நாள் 21.02.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045,
மாசி திங்கள் 9–ம் நாள்

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.152, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 02.06.1998.
2. அரசாணை (நிலை) எண்.64, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 17.02.1999.
3. அரசாணை (நிலை) எண்.222, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 01.10.2010
4. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடித எண். விகுதி7/25065/1999, நாள்.06.01.2014.
5. அரசாணை (நிலை) எண்.41, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 21.02.2014

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களுக்கு தனித்தனியே விற்பனைக்குழுக்கள் ஏற்படுத்திட ஆணை வெளியிடப்பட்டது. அவ்வாணையில், திருச்சி மாவட்ட விற்பனைக்குழுவினை மூன்றாகப் பிரித்து, திருச்சி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்களுக்கென தனித்தனியே விற்பனைக்குழுக்கள் ஏற்படுத்தவும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவின் கீழ் அறிவிக்கையிடப்பட்ட கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களைச் சார்ந்த பகுதிகளை நீக்கம் செய்திடவும், கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் வேளாண்மைவிளைபொருட்களின் விற்பனையை முறைப்படுத்தவும் முதனிலை அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

/த.பி.பா/

3. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவினை இரண்டாக பிரித்து, கரூர் மாவட்டத்தினை உள்ளடக்கிய திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு, திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு மற்றும் அரியலூர் மாவட்டத்தினை உள்ளடக்கிய பெரம்பலூர் மாவட்டத்திற்கு, பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு பெரம்பலூர் விற்பனைக்குழு ஆகியவற்றை தோற்றுவிக்கும் பொருட்டு, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஏற்கெனவே வெளியிடப்பட்ட முதனிலை அறிவிக்கைகளை 1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 9(1)(a), சட்டப்பிரிவு 4(1), ஆகியவற்றின் கீழ் உறுதி செய்தும், சட்டப்பிரிவு 5 (1), சட்டப்பிரிவு 6 (2) ஆகியவற்றின் கீழ் விற்பனைக் குழுக்களை தோற்றுவிக்கவும், அறிவிக்கையிடப்பட்ட அங்காடி பகுதிகளை அறிவிக்கவும் அறிவிக்கைகள் அனுப்பி உரிய ஆணை வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையின்படி திருச்சி விற்பனைக்குழுவிலிருந்து, கரூர் மாவட்டத்திற்கென தனி விற்பனைக்குழு தோற்றுவிக்கப்பட வேண்டும் என வெளியிடப்பட்ட ஆணையினை ரத்து செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவினை இரண்டாக பிரித்து, கரூர் மாவட்டத்தினை உள்ளடக்கிய திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு, திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு மற்றும் அரியலூர் மாவட்டத்தினை உள்ளடக்கிய பெரம்பலூர் மாவட்டத்திற்கு, பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு பெரம்பலூர் விற்பனைக்குழு ஆகியவற்றை தோற்றுவிக்கும் பொருட்டு, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஏற்கெனவே வெளியிடப்பட்ட முதனிலை அறிவிக்கைகளை 1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 9(1)(a), சட்டப்பிரிவு 4(1), ஆகியவற்றின் கீழ் உறுதி செய்தும் சட்டப்பிரிவு 5 (1), சட்டப்பிரிவு 6 (2) ஆகியவற்றின் கீழ் விற்பனை குழுக்களை தோற்றுவிக்கவும் அறிவிக்கையிடப்பட்ட அங்காடி பகுதிகளை அறிவிக்கவும் இணைப்பில் கண்டவாறு அறிவிக்கை செய்து ஆணையிடுகிறது. இவ்வரசாணையின் இணைப்பிலுள்ள அறிவிக்கை ஆங்கிலத்திலும், தமிழிலும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். அவ்வாறு தமிழ்நாடு அரசிதழில் வெளியான ஒரு மாத காலத்திற்குள் திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட அரசிதழ்களிலும் வெளியிடப்படும். மேலும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பெரம்பலூர் விற்பனைக்குழுவிற்கு தேவைப்படும் பணியாளர் குறித்து வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரால் அரசுக்கு அனுப்பப்படும் கருத்துருவின் அடிப்படையில் தனியே பரிசீலிக்கப்படும்.

6. அரசு மத்திய அச்சக பணி மேலாளர், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையின் நான்கு நகல்களை, செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை 600 009-க்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார். செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர், இவ்வறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் வெளியான ஒரு மாத காலத்திற்குள் திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் அதிகம் புழக்கத்தில் உள்ள இரு தமிழ் நாளேடுகளில்

/த.பி.பா/

பிரசுரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார். திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு செயலாளர், இவ்வறிவிக்கை திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் இரு தமிழ் நாளேடுகளில் பிரசுரிப்பதை உறுதி செய்துகொள்ளுமாறும், அவ்வாறு வெளியான இரு தமிழ் நாளேடுகளின் நகல்களை அரசுக்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார். செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை 600 009 இவ்வறிவிக்கை இரு தமிழ் நாளேடுகளில் வெளியிடுவதற்காகும் செலவினச் சீட்டை திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு செயலாளருக்கு நேரடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. அரசு மத்திய அச்சக பணி மேலாளர், சென்னை 600 079 மற்றும் உதவி பணி மேலாளர், அரசினர் கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி ஆகியோர் முறையே அறிவிக்கை வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசிதழ், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட அரசிதழ்களின் இரு நகல்களை அரசுக்கு (வேளாண்மை (வேவி2) துறைக்கு) அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

/ஆளுநரின் ஆணைப்படி/

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:-
பணி மேலாளர், அரசு மத்திய அச்சகம், சென்னை– 600 079.
உதவி பணி மேலாளர், அரசினர் கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9. (4 நகல்கள்)
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை–32 (6 நகல்கள்)
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை–32.
செயலாளர், திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை – 32 மூலமாக).
திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட ஆட்சியர்கள்.
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை–108.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை –9.

நகல் :–
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்புநேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
சட்டத்துறை, சென்னை–9. / நிதித்துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

24.2.14
பிரிவு அலுவலர்
24/2/14

# இணைப்பு

அரசாணை (நிலை) எண்.42, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 21.02.2014.

## அறிவிக்கை-I

1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 9-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவின் அறிவிக்கையிடப்பட்ட பகுதியிலிருந்து பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள கீழ்க்குறிப்பிடப்பட்ட அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப்பகுதிகளை நீக்குவதற்காக வெளியிடப்பட்ட அறிவிப்பை இதனால் உறுதி செய்கிறார்.

| பெரம்பலூர் மாவட்டம் | அரியலூர் மாவட்டம் |
|---|---|
| (1) பெரம்பலூர் | (1) அரியலூர்<br>(2) ஜெயங்கொண்டம்<br>(3) ஆண்டிமடம்.<br>(4) மேலணிக்குழி |

இவ்வாறு, அறிவிப்பு செய்வதன் நோக்கம் குறித்து மேற்குறிப்பிட்ட சட்டத்தில் 3-ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

# இணைப்பு

அரசாணை (நிலை) எண்.42, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 21.02.2014.

அறிவிக்கை-II

1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 4-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நெல், வேர்க்கடலை (கடலைக்காய் மற்றும் பருப்பு), எள், மிளகாய், கொத்தமல்லி, முந்திரி (அனைத்து வடிவங்களிலும்), கரும்பு வெல்லம் அனைத்து வடிவங்களிலும் (வெல்லத்தூள், பழுப்பு சர்க்கரை), கம்பு (அனைத்து வடிவங்களிலும்), கேழ்வரகு (அனைத்து வடிவங்களிலும்), சோளம் (அனைத்து வடிவங்களிலும்), உளுந்து (அனைத்து வடிவங்களிலும்), மஞ்சள் (கிழங்கு அல்லது விரலி மஞ்சள்), மரவள்ளி (மரவள்ளிக்கிழங்கு, மரவள்ளி சீவல், மரவள்ளிகிழங்கு மாவு, மரவள்ளிக்கிழங்கு ஸ்டார்ச்) பருத்தி (கப்பாஸ், லிண்ட் பருத்தி, கழிவு பருத்தி), இளநீர் நீங்கலான தேங்காய் அனைத்து வகை மற்றும் புகையிலை அனைத்து வடிவங்களிலும் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கத்திற்காக, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களை அறிவிக்கையிடப்பட்ட பகுதிகளாக இதனால் அறிவிக்கிறார். இவ்வாறு அறிவிக்கப்படுவதன் நோக்கம் குறித்து மேற்குறிப்பிட்ட சட்டத்தில் 3-ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்கெனவே அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

24/2.14
பிரிவு அலுவலர்.

## இணைப்பு

அரசாணை (நிலை) எண்.42, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 21.02.2014.

## அறிவிக்கை-III.

1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 5-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் திருச்சிராப்பள்ளி, மண்ணச்சநல்லூர், இலால்குடி, மணப்பாறை, துவரங்குறிச்சி, துறையூர், தொட்டியம், காட்டுபுத்தூர், தாத்தையங்கார்பேட்டை, கரூர், சின்னதாராபுரம், குளித்தலை, இரும்பூதிப்பட்டி ஆகிய அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப்பகுதிகளை உள்ளடக்கிய திருச்சிராப்பள்ளி தலைமையிடமாக கொண்டு கரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 2014-ஆம் ஆண்டு 21.02.2014 அந்நாள் முதற்கொண்ட விற்பனைக்குழு ஒன்றை இதனால் அமைக்கிறார். மேற்சொன்ன விற்பனைக்குழு 'திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு' என்று அழைக்கப்படும்.

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
24.2.14

# இணைப்பு

அரசாணை (நிலை) எண்.42, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 21.02.2014.

அறிவிக்கை-IV.

1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 5-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பெரம்பலூர், அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், மேலணிக்குழி ஆகிய அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப்பகுதிகளை உள்ளடக்கிய பெரம்பலூரைத் தலைமையிடமாக கொண்டு அரியலூர் மாவட்டத்தை உள்ளடக்கிய பெரம்பலூர் மாவட்டத்திற்கு 2014-ஆம் ஆண்டு 21.02.2014 அந்நாள் முதற்கொண்ட விற்பனைக்குழு ஒன்றை இதனால் அமைக்கிறார். மேற்சொன்ன விற்பனைக்குழு பெரம்பலூர் விற்பனைக்குழு என்று அழைக்கப்படும்.

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

24.2.14
பிரிவு அலுவலர்.
24/2/14

## இணைப்பு

அரசாணை (நிலை) எண்.42, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 21.02.2014.

அறிவிக்கை-V.

1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 6-ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள திருச்சிராப்பள்ளி, மண்ணச்சநல்லூர், இலால்குடி, மணப்பாறை, துவரங்குறிச்சி, துறையூர், தொட்டியம், காட்டுபுத்தூர், தாத்தையங்கார்பேட்டை, கரூர், சின்னதாராபுரம், குளித்தலை, இரும்பூதிப்பட்டி ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பகுதிகளை நெல், வேர்க்கடலை (கடலைக்காய் மற்றும் பருப்பு), எள், மிளகாய், கொத்தமல்லி, முந்திரி (அனைத்து வடிவங்களிலும்), கரும்பு வெல்லம் அனைத்து வடிவங்களிலும் (வெல்லத்தூள், பழுப்பு சர்க்கரை), கம்பு (அனைத்து வடிவங்களிலும்), கேழ்வரகு (அனைத்து வடிவங்களிலும்), சோளம் (அனைத்து வடிவங்களிலும்), உளுந்து (அனைத்து வடிவங்களிலும்), மஞ்சள் (கிழங்கு அல்லது விரலி மஞ்சள்), மரவள்ளி (மரவள்ளிக்கிழங்கு, மரவள்ளி சீவல், மரவள்ளிகிழங்கு மாவு, மரவள்ளிக்கிழங்கு ஸ்டார்ச்) பருத்தி (கப்பாஸ், லிண்ட் பருத்தி, கழிவு பருத்தி), இளநீர் நீங்கலான தேங்காய் அனைத்து வகை மற்றும் புகையிலை அனைத்து வடிவங்களிலும், ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கத்திற்காக, அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக அறிவிக்கிறார்.

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 24.2.14
24/2/14

# இணைப்பு

அரசாணை (நிலை) எண்.42, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 21.02.2014.

## அறிவிக்கை-VI

1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 6-ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பெரம்பலூர் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள பெரம்பலூர், அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், மேலணிக்குழி ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பகுதிகளை நெல், வேர்க்கடலை (கடலைக்காய் மற்றும் பருப்பு), எள், மிளகாய், கொத்தமல்லி, முந்திரி (அனைத்து வடிவங்களிலும்), கரும்பு வெல்லம் அனைத்து வடிவங்களிலும் (வெல்லத்தூள், பழுப்பு சர்க்கரை), கம்பு (அனைத்து வடிவங்களிலும்), கேழ்வரகு (அனைத்து வடிவங்களிலும்), சோளம் (அனைத்து வடிவங்களிலும்), உளுந்து (அனைத்து வடிவங்களிலும்), மஞ்சள் (கிழங்கு அல்லது விரலி மஞ்சள்), மரவள்ளி (மரவள்ளிக்கிழங்கு, மரவள்ளி சீவல், மரவள்ளிகிழங்கு மாவு, மரவள்ளிக்கிழங்கு ஸ்டார்ச்) பருத்தி (கப்பாஸ், லிண்ட் பருத்தி, கழிவு பருத்தி), இளநீர் நீங்கலான தேங்காய் அனைத்து வகை மற்றும் புகையிலை அனைத்து வடிவங்களிலும் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கத்திற்காக, அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப்பகுதிகளாக அறிவிக்கிறார்.

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.
22.2.14
24/12/14

## Appendix

G.O.(Ms).No.42, Agriculture (AM.2) Department, Dated 21.02.2014

## NOTIFICATION-I.

In exercise of the powers conferred by clause (a) of sub – Section (1) of section 9 of the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby Confirms the declaration of exclusion of the following Markets from the notified area of the Trichirappalli Market Committee in Perambalur and Ariyalur Districts as mentioned below:-

| Perambalur District | Ariyalur District |
|---|---|
| (1) Perambalur | (1) Ariyalur<br>(2) Jayankondam<br>(3) Andimadam<br>(4) Melanikuzhi |

The intention to make such a declaration having been previously published as required by Section 3 of the said Act.

SANDEEP SAXENA
Agricultural Production Commissioner
and Principal Secretary to Government

/True Copy/

Section Officer

## Appendix

G.O.(Ms).No.42, Agriculture (AM.2) Department, Dated 21.02.2014

## NOTIFICATION-II.

In exercise of the powers conferred by sub-section (1) of section 4 of the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby declares the Perambalur and Ariyalur districts to be notified areas for the purpose of the said Act in respect of Paddy, Groundnut (pods and kernels whole or split), Gingelly or Seasamum seed or Ellu, Chillies, Coriander, Cashew nut ( in all forms ), Sugarcane Jaggery (in all forms) (Sugarcane Jaggery powder, Brown sugar), Cumbu (in all forms), Ragi (in all forms), Cholam (in all forms), Black gram (Ulundu) (in all forms), Turmeric (in all forms) (Bulb and finger), Tapioca – Tubes, Tapioca Chips, Tapioca flour, Tapioca Starch, Cotton (Kapas, Lint and Waste), Coconut in all forms except Tender Coconut and tobacco (in all forms). The intention to make such a declaration having been previously published as required by section 3 of the said Act.

SANDEEP SAXENA
Agricultural Production Commissioner
and Principal Secretary to Government

/True Copy/

Section Officer

## Appendix

G.O.(Ms).No.42, Agriculture (AM.2) Department, Dated 21.02.2014

## NOTIFICATION-III.

In exercise of the powers conferred by sub-section (1) of section 5 of Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby establishes a Market Committee for the notified area of Thirachirappalli district including the Karur district with head quarters at Thirachirappalli comprising the notified market areas of Thirachirappalli, Mannachanallur, Lalgudi, Manapparai, Thuvarankurichi, Thuraiyur, Thottiyam, Kattuputhur, Thathaiyangarpet, Karur, Chinnatharapuram, Kulithalai and Irumboothipatti Markets with effect on and from 21.02.2014 and the said Market Committee shall be known as Thirachirappalli Market Committee.

SANDEEP SAXENA
Agricultural Production Commissioner
and Principal Secretary to Government

/True Copy/

Section Officer

## Appendix

G.O.(Ms).No.42, Agriculture (AM.2) Department, Dated 21.02.2014

## NOTIFICATION-IV.

In exercise of the powers conferred by sub-section (1) of section 5 of Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby establishes a Market Committee for the notified area of Perambalur District including the Ariyalur district with head quarters at Perambalur comprising the notified market areas of Perambalur, Ariyalur, Jayankondam, Andimadam and Melanikuzhi Markets with effect on and from 21.02.2014 and the said Market Committee shall be known as 'Perambalur Market Committee.'

SANDEEP SAXENA
Agricultural Production Commissioner
and Principal Secretary to Government

/True Copy/

Section Officer

## Appendix

G.O.(Ms).No.42, Agriculture (AM.2) Department, Dated 21.02.2014

## NOTIFICATION- V.

In exercise of the powers conferred by sub-section (2) of section 6 of Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby declares the Thirachirappalli, Mannachannalur, Lalgudi, Manapparai, Thuvarankurichi, Thuraiyur, Thottiyam, Kattuputhur, Thathaiyangarpet, Karur, Chinnatharapuram, Kulithalai and Irumboothipatti Markets of Thirachirappalli Market Committee shall be the notified market areas for the purpose of the said Act in respect of Paddy, Groundnut (pods and kernels whole or split), Gingelly or Seasamum seed or Ellu, Chillies, Coriander, Cashew nut (in all forms), Sugarcane Jaggery (in all forms) (Sugarcane Jaggery powder, Brown sugar), Cumbu (in all forms), Ragi (in all forms), Cholam (in all forms), Black gram (Ulundu) (in all forms), Turmeric (in all forms) (Bulb and finger), Tapioca – Tubes, Tapioca Chips, Tapioca flour, Tapioca Starch, Cotton (Kapas, Lint and Waste), Coconut in all forms except Tender Coconut and tobacco (in all forms).

SANDEEP SAXENA
Agricultural Production Commissioner
and Principal Secretary to Government

/True Copy/

24.12.14

Section Officer

24/2/14

## Appendix

G.O.(Ms).No.42, Agriculture (AM.2) Department, Dated 21.02.2014

## NOTIFICATION-VI.

In exercise of the powers conferred by sub-section (2) of section 6 of the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby declares the Perambalur, Ariyalur, Jayankondam, Andimadam and Melanikuzhi markets of Perambalur Market Committee shall be the notified market areas for the purpose of the said Act in respect of Paddy, Groundnut (pods and kernels) (Whole or split), Gingelly or Seasamum seed or Ellu, Chillies, Coriander, Cashew nut (in all forms), Sugarcane Jaggery (in all forms) (Sugarcane Jaggery powder, Brown sugar), Cumbu (in all forms), Ragi (in all forms), Cholam (in all forms), Black gram (Ulundu) (in all forms), Turmeric (in all forms) (Bulb and finger), Tapioca - Tubes, Tapioca Chips, Tapioca flour, Tapioca Starch, Cotton (Kapas, Lint and Waste), Coconut in all forms except Tender Coconut and tobacco (in all forms).

SANDEEP SAXENA
Agricultural Production Commissioner
and Principal Secretary to Government

/True Copy/

Section Officer